**தலைப்பு 262 – மாத்தறை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 262 - மாத்தறை மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 26 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

மாவட்டச் செயலகத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,074.35 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 1,000.93 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான ரூபா 73.42 மில்லியன் அதாவது 6.83 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 991.54 | 929.72 | 61.82 | 6.23 |
| மூலதனம் | 82.81 | 71.21 | 11.60 | 14.01 |
| மொத்தம் | 1,074.35 | 1,00.93 | 73.42 | **6.83** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு 35 ஏனைய அமைச்சுக்களிலிருந்தும் 17 திணைக்களங்களிலிருந்தும் ரூபா 3,883.24 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அதில் ரூபா 3,084.62 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குக் கிடைத்த நிதிஏற்பாடுகளில் ரூபா 798.62 தொகை அதாவது 21 சதவீதமான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய 26201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 56.96 | 49.17 | 41.96 | 52.05 | 200.00 | 190.36 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 436.60 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0069/000 | 0.399 |
| 6000/0000/00/0002/0093/000 | 0.007 |
| 6000/0000/00/0013/0061/000 | 10.395 |
| 6000/0000/00/0016/0014/000 | 336.797 |
| 6000/0000/00/0017/0023/000 | 89.002 |
| மொத்தம் | **436.600** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

மாத்தறை மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினாலும் பிரதேச செயலகங்களினாலும் பின்வரும் பதிவேடொன்று பேணப்படாதிருந்ததுடன் இரண்டு பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மாவட்ட செயலகத்தினாலும் 04 பிரதேச செயலகங்களினாலும் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மாவட்ட செயலகத்தினாலும் 04 பிரதேச செயலகங்களினாலும் நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

**3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 44 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும், முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 05 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்கள் தொடர்பில் கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 49.88 மில்லியனாக இருந்தன.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.3.1 பாதீட்டு முரண்**

மாவட்ட செயலக தலைப்பிற்குரிய 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 மாற்றங்களின் மூலம் மேலதிக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 05 செலவின விடயங்களின் தேறிய நிதிஏற்பாடுகளிலிருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் மேலும் சேமிப்புக்கள் 10 சதவீதம் முதல் 12 சதவீதம் வரையான வீச்சளவினைக் கொண்டிருந்தது.

**3.3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு**

ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தும் போது வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய இருதயநோய் சிகிச்சை நிலையத்தை மேம்படுத்துவதற்கு மாவட்ட செயலகத்தினால் 2015 திசெம்பர் 18 ஆந் திகதி காணியை விடுவிப்பதற்கு முன்னர் ரூபா 4.78 மில்லியன் முற்பணத் தொகை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2016 யூன் 20 ஆந் திகதி அளவிலும் நிர்மாண வேலையின் பணிகள் ஆரம்பிக்கப்படாமையால் அரசின் பணம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) கம்புறுப்பிட்டிய தேசிய பாடசாலையொன்றில் ரூபா 8.00 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மதில் வெளித்தரப்பினரால் அனுமதியின்றி உடைத்து அகற்றப்பட்டமையால் வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் பேரில் அதனை மீள நிர்மாணிப்பதற்கு மாவட்ட செயலகத்தினால் ஒப்பந்த நிறுவனமொன்றுடன் ரூபா 6.46 மில்லியனுக்கு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 29 ஆந் திகதி ரூபா 184,221 ஆன முற்பணத்தொகையொன்று ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், நிர்மாண வேலைகள் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொடமுன மீன்பிடி துறைமுகத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணத்திற்காக மாத்தறை பிரதேச செயலகத்தினால் விவசாய அமைப்பொன்றுடன் ரூபா 1.46 மில்லியனுக்கு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. பரிசோதனை அறிக்கை மூலம் நிர்மாணம் தோல்வியடைந்ததன் காரணமாக மாத்தறை பிரதேச செயலகத்தினால் கொடுப்பனவு இடை நிறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் மாவட்ட செயலகத்தினால் 2015 ஏப்ரல் 21 ஆந் திகதி ரூபா 1.50 மில்லியன் நிதிஏற்பாட்டை மீண்டும் கையேற்று 2015 யூலை 02 ஆந் திகதி ரூபா 1.45 மில்லியன் உரிய சங்கத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உரிய நியமத்தின் பிரகாரம் மீன்பிடி துறைமுகம் நிர்மாணிக்கப்படாமையால் செலுத்தப்பட்ட மொத்த தொகையில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் 2012 ஆகஸ்ட் 29 ஆந் திகதி ரூபா 1.92 மில்லியன் செலவிடப்பட்டு மாவட்ட செயலகத்திற்கு பாதுகாப்பு கெமரா முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் 2016 யூன் 01 ஆந் திகதியளவில் கெமரா முறைமை முழுமையாக செயலற்று காணப்பட்டது.

(உ) கிராம எழுச்சி செயற்திட்டத்தின் கீழ் மாத்தறை மாவட்டத்தின் பிரதேச செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த கைத்தொழில் மற்றும் செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) இரண்டு செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஹக்மண பிரதேச செயலகத்திற்கு ரூபா 1.96 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், உரிய செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாமல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(ii) பஸ்கொடை பிரதேச செயலகத்தினால் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த ரூபா 1.47 மில்லியனான 2 செயற்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) பஸ்கொட நாபன்எல்ல மத்திய மருந்தகத்திற்கு தாய்சேய் நலன் பிரிவொன்றுக்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக விவசாய அமைப்பொன்றுடன் பஸ்கொடை பிரதேச செயலாளரால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 882,0000 செலுத்தப்பட்டிருந்தது. குறித்த நிர்மாணம் மாடிக் கட்டிடமொன்றாக நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் மேல் மாடிக்கு செல்வதற்கு படிக்கட்டொன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உரிய நிர்மாணத்தின் வேலையைப் பூர்த்தி செய்வதற்கு நிதிஏற்பாடு போதுமானதாக இல்லாமையால் நிர்மாணத்திலிருந்து பயனைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமொன்றாக இருந்தது.

(iv) தன்னஹேன - புஹுல்ஹேன வலகட வீதியை அபிவிருத்தி செய்தவதற்காக கிராம அபிவிருத்தி சங்கமொன்றுக்கு பஸ்கொட பிரதேச செயலகத்தினால் 2015 திசெம்பர் 31 இல் ரூபா 437,454 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிர்மாண வேலையை உரிய நியமத்திற்கு இணங்க நிறைவேற்றப்படாமல் இருந்ததுடன் நிறைவேற்றப்படாத 03 வேலைப்பகுதிகளுக்கு ரூபா 42,393 செலுத்தப்பட்டிருந்தது.

(v) பஸ்கொட பெங்கமுவ மேற்கு, கிரிவன்தெனிய கல்கொடஹேன வீதியை அபிவிருத்தி செய்தவதற்காக கிராம அபிவிருத்தி சங்கமொன்றுக்கு 2015 திசெம்பர் 31 இல் ரூபா 435,572 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிர்மாண வேலையை உரிய நியமத்திற்கு இணங்க நிறைவேற்றப்படாமல் இருந்ததுடன் நிறைவேற்றப்படாத 02 வேலைப்பகுதிகளுக்கு ரூபா 63,143 செலுத்தப்பட்டிருந்தது.

..

(vi) பஸ்கொட கரோல்லோவிட்ட சன சமூகமண்டபத்தை நிர்மாணிப்பதற்காக விவசாய அமைப்பொன்றுக்கு 2015 திசெம்பர் 31 இல் ரூபா 609,977 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 337,137 தொகையான வேலைப்பகுதி நியமத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(vii) கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் கரதொட்ட சனசமூக மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக கிராம அபிவிருத்தி சங்கமொன்றுக்கு 2015 திசெம்பர் 14 ஆந் திகதி ரூபா 989,800 செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிர்மாண வேலை உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கை செய்யப்பட்ட பணத் தொகையில் நிர்மாணத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தது. இதனால் செலவிடப்பட்ட பணம் பயனற்றிருந்தது.

(ஊ) மாகாண எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்தறை பிரதேச செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த நிர்மாணங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கும்பல்கம வாரச் சந்தை நிர்மாணத்திற்காக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1.94 மில்லியன் முற்பணம் மாத்தறை பிரதேச சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2016 யூன் 20 ஆந் திகதி வரையிலும் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் முற்பணம் செலுத்தி 17 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டவாறிருந்தது.

(ii) தெனிபிட்டிய கிழக்கு மற்றும் பதலஹேன பல்நோக்கு கட்டிட நிர்மாணத்திற்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தாமதக் கட்டணம் அறவிடப்படாமல் முறையே ரூபா 1.36 மில்லியன் ரூபா 1.38 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2016 யூன் 20 ஆந் திகதி வரையிலும் உரிய கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலைமைக்கு எடுக்கக்கூடிய நிலையில் காணப்படாமையால் செலவிடப்பட்ட பணம் பயனற்றதாக இருந்தது.

(எ) 2014 அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மாலிம்பட பிரதேச செயலகப் பிரிவின் எகொடஹுவத்த முதல் பன்சல வீதியை அபிவிருத்தி செய்வதற்காக 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதி ரூபா 428,368 மாலிம்பட பிரதேச சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் தரப் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் நிர்மாண வேலை உரிய நியமமொன்று இல்லாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

(ஏ) ஹக்மன பிரதேச செயலகத்தி அமுலிலுள்ள அபிவிருத்தி திட்டத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான 2015 ஆம் ஆண்டில் தொடர் வேலையாக்கப்பட்ட ரூபா 562,028 தொகையான 04 நிர்மாணங்களுக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2016 சனவரி 08 ஆந் திகதி வரையிலும் உரிய நிர்மாணங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) தெவிநுவர பிரதேச செயலகத்தின் 2014 ஆம் ஆண்டின் 2015 ஆம் ஆண்டில் தொடர் வேலையாக்கப்பட்ட ரூபா 1.90 மில்லியன் கூட்டுத்தொகையான மக்கள் பிரதிநிதிகளின் 03 விஷேட செயற்திட்டங்கள் மற்றும் ருஹுனு எழுச்சியின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 5.19 மில்லியனான 04 செயற்திட்டங்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கைவிடப்பட்டிருந்தது.

(ஒ) மாத்தறை பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் மெதகெதரவத்த வீதியின் பொல்ஹேன வீதியின் வடிகாண் வரை நீர் செல்லும் கால்வாய் நிர்மாணத்திற்காக ரூபா 959,868 செலுத்தப்பட்டிருந்தது. 2015 செப்தம்பர் 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அங்கீகரிக்கப்படாத வேலைப்பகுதி மற்றும் செய்யப்படாத வேலைப்பகுதிகள் உட்படுத்தப்பட்டு ரூபா 559,357 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் மாத்தறை மாவட்டத்தின் பாடசாலைகளில் கணனி ஆய்வுகூடங்களுக்காக 50 கணனி மேசைகளும் 100 கதிரைகளையும் வழங்குவதற்காக 2015 யூன் 04 ஆந் திகதி மொத்தம் ரூபா 2.10 மில்லியன் கூட்டுத்தொகை மாவட்ட செயலகத்தினால் தனியார் நிறுவனமொன்றுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அரசின் பெறுகைகள் நடைமுறை நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் பின்பற்றப்படாமையால் ஒப்பந்தக்காரரால் இடைத்தரகர் ஒருவர் ஊடாக பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

(ஔ) இளைஞர் விவகாரம் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் மாத்தறை பிரதேச செயலகத்தினால் மாத்தறை இளைஞர் பூங்கா நிர்மாணத்திற்காக காணியொன்றை கையேற்பதற்கு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 142.31 மில்லியன் இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. உரிய நிர்மாண வேலைகளுக்கு ரூபா 6.00 மில்லியன் செலவிடப்பட்டதன் பின்னர் செயற்திட்ட பணிகள் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது.

(க) கலாசார நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக தனியார் காணியொன்று அரசினால் கையேற்கப்பட்டு 2015 மே மாதம் வரையிலும் ரூபா 11.50 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 2015 செப்தம்பர் மாதத்தின் போது அதன் அனைத்து நிர்மாணங்களும் நிறுத்தப்பட்டிருந்தது. நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படாமையால் இழப்பிட்டு தொகையை மீண்டும் கொடுப்பனவு செய்தல் என்ற அடிப்படைக்கு உட்பட்டு காணியை மீண்டும் கையளிக்குமாறு காணி உரியமையாளர்களால் கோரப்பட்டிருந்தது.

(கா) மாலிம்பட பிரதேச செயலக பிரதேசத்தினுள் ரூபா 17.86 மில்லியன் செலவு செய்து செயற்படுத்தப்பட்ட 32 செயற்திட்டங்கள் உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டிருந்தது, அதில் ரூபா 1.18 மில்லியனான 08 செயற்திட்டங்கள் மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்குகள்

2 வருடங்களை விஞ்சிய ரூபா 322,173 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

26201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் இடமாற்றலாகிச்

சென்ற, மரணித்த, ஓய்வுபெற்ற, சேவையிலிருந்து நீக்கப்பட்ட மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட 16 உத்தியோகத்தர்களிடமிருந்து 2016 யூலை 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,488,700 ஆக இருந்தது. அந்நிலுவை கடன் மீதிகள் 01 வருடம் முதல் 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து இருந்து வந்த போதிலும் அந் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

திஹகொட பிரதேச செயலகத்திற்குரிய முச்சக்கர வண்டியொன்று ஒன்றரை வருடங்களாக குறைப்பயன்பாட்டுடனும் மாவட்ட செயலகத்திற்குரிய வெஹரகம்பிட்டவில் அமைந்துள்ள 02 அரச இல்லங்கள் 02 வருடங்களாக விளைவற்றும் காணப்பட்டன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 10 பிரதேச செயலகங்களில் 60 பொருள் உருப்படிகளுக்குரிய 652 பொருள் அலகுகளில் பற்றாக்குறை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 இணக்கமின்மைகள்**

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 136 மற்றும் 139 | 11,008,700 | கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட பொருட்களுக்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி 03 காசோலைகள் எழுதப்பட்டு பின்னர் இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ii) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.6.1 வழிகாட்டல் | 1,892,757 | மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டிற்காக எழுதுகருவிகளைக் கொள்வனவு செய்யும் போது முன்னைய ஆண்டின் எழுதுகருவிகளைக் கொள்வனவு செய்வதற்கு எடுத்த கொள்வனவு |

தீர்மானத்தின் அடிப்படையில் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

**(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காத வகையில் செயற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) மாவட்ட செயலகம் மற்றும் 2 பிரதேச செயலகங்களினால் செயற்பாட்டை உறுதிப்படுத்தாமல் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கும் வழங்குனருக்கும் ஒப்பந்தக்காரர்களிற்கு ரூபா 4,213,769 ஆன பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்தது.

(ii) பெறுமதி சேர் வரிக்காக பதிவுசெய்யப்படாதிருந்த ஒப்பந்தக்காரரொருவருக்கு மீளாய்வாண்டின் போது பெறுமதி சேர் வரியாக ரூபா 166,660 செலுத்தப்பட்டிருந்தது

**3.8 செயலாற்றல்**

2015 இன் வருடாந்த மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(i) தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் கொள்வனவானது 2015 யூலை 31 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்திற்காக ரூபா 3.06 மில்லியன் கூட்டுப்பெறுமதியான வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் 2015 யூலை 31 ஆந் திகதி வரை 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 23 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இப் பெறுமதி ஆண்டின் மொத்தக் கொள்வனவின் 93 சதவீதமாக இருந்தது.

(ii) இயந்திரங்கள் மற்றும் இயந்திராதியங்கள் கொள்வனவு 2015 யூலை 31 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்திற்காக ரூபா 222,980 கூட்டுப்பெறுமதியான வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் 2015 யூலை 31 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 04 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இப் பெறுமதி ஆண்டின் மொத்தக் கொள்வனவின் 94 சதவீதமாக இருந்தது.

**3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

மாவட்ட செயலகத்தினால் 2015 ஆம் ஆண்டின் போது புதிய சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக ரூபா 1.82 மில்லியன் செலவில் 20 மேசைக் கணணிகளும் ரூபா 445,000 செலவில் 05 மடிக் கணணிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அப்பொருட்கள் அங்கீகரிக்கப்பட்ட விதத்துரைகளுக்கு இணங்காமல் இருந்தன. ரூபா 182,000 தொகையான 2 மேசை கணணிகளும் 05 மடி கணனிகளும் உரிய நோக்கங்களுக்கு புறம்பான செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தன.

**3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) தெவிநுவர பிரதேச செயலகத்தின் புதிய கட்டிட நிர்மாணத்திற்கான பிரதேச செயலாளரால் ஒப்பந்த சங்கமொன்றுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனைக் கருத்திற்கொள்ளாமல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி மாவட்ட செயலகத்தினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி மாவட்ட செயலகத்தினால் ரூபா 1,687,238 ஆன காசோலையொன்று ஒப்பந்தக்காரர் பெயரில் எழுதி பின்னர் 2016 பெப்ரவரி 17 ஆந் திகதி பிரதேச செயலாளர் தெவிநுவர என மாற்றி பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. நிர்மாணத்திற்குரிய வெளி வேலைகளுக்காக ரூபா 272,606 தொகையும் மேலதிக வேலைக்காக ரூபா 145,645 என்ற வகையில் ரூபா 418,251 வேலைகளுக்காக மாவட்ட பொறியியலாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 557,108 தொகை மாவட்ட செயலகத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிர்மாணத்திற்குரிய கொடுப்பனவின் போது நிதிப்பிரமாணம் 136 முதல் 139 வரையான பிரமாணங்களின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் முறையற்ற விதத்தில் ரூபா 1.69 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததது.

(இ) மாத்தறை வெஹெரகம்பிடவில் அமைந்துள்ள உதவி மாவட்ட செயலாளருக்கு ஒதுக்கப்பட்டிருந்த வீட்டினைப் பழுதுபார்ப்பதற்காக சமுர்த்தி சங்கமொன்றுடன் ரூபா 1.40 மில்லியனுக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உரிய மதிப்பீடு மற்றும் அளவிட்டுப் பத்திரங்கள் மாவட்ட பொறியியலாளரால். பரிந்துரைக்கப்பட்டிருக்கவில்லை. அந் நிர்மாண வேலை நிர்மாணிக்கப்பட்ட ரூபா 1.19 மில்லியனான வேலைப் பெறுமதிக்காக முறைப்படி அளவிடைப் படத்திரங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நிறைவேற்றப்பட்ட வேலைகளில் குறிப்பாக இனங்காண முடியாத வேலைப்பகுதிக்காக ரூபா 446,000 தொகை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பிடிகாசினை கழித்து 2015 ஏப்ரல் 07 ஆந் திகதி ரூபா 623,634 தொகை அங்கீகாரம் இல்லாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.11 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான கால வீச்சில் இடம் பெற்றிருந்த 30 வாகன விபத்துக்களுக்குரிய இழப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 1.89 மில்லியனாக இருந்தது. இந்த நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவழிப்பதற்கு அல்லது அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுனாமி சந்தர்ப்பத்தில் இடம் பெற்ற நட்டங்கள் மற்றும் சேதங்கள் மற்றும் சம்பள கொள்ளையடித்தமை போன்ற நட்டங்களுக்காக 5 ஆண்டு முதல் 18 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 15.32 மில்லியனான 05 சேதங்கள் மற்றும் நட்டச் சம்பவங்களுக்குரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மாவட்ட செயலகத்திற்குரிய மோட்டார் வண்டியொன்று 2011 திசெம்பர் 25 ஆந் திகதி விபத்திற்குட்பட்டமையால் ரூபா 1,817,098 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. குறித்த விபத்து தொடர்பாக கவனயீனம் மற்றும் முறையற்ற விதத்தில் நடவடிக்கை

எடுத்தமையால் அரசிற்கு ஏற்பட்டிருந்த ரூபா 103,213 ஆன நட்டமொன்றை வண்டியின் சாரதியிடம் அறவிட்டுக்கொள்ளுமாறு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் 2014 மார்ச் 28 ஆந் திகதி மாத்தறை மாவட்ட செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்காமல் அத்தகவல்களை மறைத்து நட்டத்தைப் பதிவழிப்பதற்கு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**3.12 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 2006 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 7.4 (இ) பந்தியில் உள்ளடக்கப்பட்ட கந்தரவெல்ல மீன்பிடிக் கிராமத்தின் ரேன்த பொல நிர்மாணம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.13 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 56 | 52 | 04 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 34 | 22 | 13 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 1255 | 1426 | 61 | 232 |
| (iv) | ஆரம்ப நிலை | 142 | 145 | - | 03 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக /ஒப்பந்த அடிப்படை) | 06 | 02 | 04 | - |
| | மொத்தம் | 1,493 | 1,647 | 82 | 236 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை உத்தியோகத்தர்கள் 17 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக தாக்கமொன்று ஏற்பட்டிருந்தது.

(ii) 43 கிராம சேவையாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அதிகாரப் பிரதேசத்தின் மக்களுக்கு தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான ஒத்துழைப்பு கிடைத்திருக்கவில்லை.

(iii) அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக பட்டதாரிப் பயிலுனர்களை ஆட்சேர்க்கும் போது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் 95 பட்டதாரி பயிலுனர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும். மாவட்ட செயலகத்தினால் வெவ்வேறு பதவிகள் ஏற்படுத்தப்பட்டு 307 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். 212 மிகையான உத்தியோகத்தர்களுக்காக முறையான அங்கீகாரமொன்று 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஒட்டு மொத்தமாக எடுத்த போது 236 மிகையான உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் 82 வெற்றிடங்கள் தொடர்பாகவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அலுவலகத்திற்கு தேவையான பதவிகள் தொடர்பான முறையான ஆய்வொன்றும் திட்டமொன்றும் இல்லாது நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தினால் மிகை ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் சில சந்தர்ப்பங்களில் அந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வேறு சேவைகளில் கடமைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.